# சக்கர வியூகம்

தினசரி புலனாய்வு நாளிதழ்

SAKKRA VIYUGAM

www.sakkraviyugam.com | TNTAM/25/A1018 | sakkraviyugam2025@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 191 | 04.1.2026 | SUNDAY | MARGAZHI : 20 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 191 | 04.1.2026 | ஞாயிற்றுக்கிழமை | மார்கழி : 20 | விலை : ரூ.5/- |



3 வெனிசுலாவில் அடுத்தடுத்து 7 வெடிப்புச் சம்பவங்கள்: தாக்குதலை தொடங்கியதா அமெரிக்கா?

4 ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப் சார்பில் வருவாய்த்துறையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

2 "அன்பைச் சொல்லித்தரும் ஆன்மிகத்தை வம்பு செய்யப் பயன்படுத்துகிறார்கள்" முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு


## கூடுதல் செலவு

# "ஆண்டுக்கு ரூ.11 ஆயிரம் கோடி"



■ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி வாயிலாக, இந்து சமய அறநிலையத் துறை சார்பில், தென்காசி மாவட்டம், குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீபராசக்தி வித்யாலயா CBSE பள்ளியில் ரூ.16.48 கோடி மதிப்பீட்டில் 54 வகுப்பறைகள் கட்டும் பணியினை துவக்கி வைத்த நிகழ்வில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீ குமார், கலந்து கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் உள்ளார்.



■ சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டபம் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. அசன் மௌலானா, துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு வே. ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் திரு.ச.செல்வராஜ் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு முதல்வர் தாராளம்

சென்னை, ஜன.4-

அரசு அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் (டி.ஏ.பி.எஸ்.,) என்ற திட்டத்தை செயல்படுத்துவதாக முதல்வர் ஸ்டாலின் இன்று (ஜனவரி 03) அறிவித்தார். இதன் மூலம், அரசுக்கு ஆண்டுக்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதலாக செலவாகும்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பழைய ஓய்வூதியத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று பல ஆண்டுகளாக தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். கடந்த 2021ம் ஆண்டு தேர்தலுக்கு முன்னதாக, பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று திமுக வாக்குறுதி அளித்தது.

ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு, அதை செயல்படுத்தவில்லை. நான்கரை ஆண்டுக்கும் மேலான நிலையிலும், அளித்த வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை.இது அரசு ஊழியர், ஆசிரியர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருந்தது. அந்த கோரிக்கையை பிரதானமாக வலியுறுத்தி



அரசு ஊழியர், ஆசிரியர் சங்கங்கள், ஜன.,6 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் அறிவித்தனர்.

இந்த விவகாரத்தால், தேர்தலில் தங்களுக்கு பின்னடைவு ஏற்படக்கூடும் என்று உணர்ந்த தமிழக அரசு, இப்போது புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. பழைய ஓய்வூதிய திட்டத்தில் இருந்த அம்சங்கள் புதிய திட்டத்தில் இருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல்வர் இன்று அறிவித்த டி.ஏ.பி.எஸ்., என்ற புதிய ஓய்வூதிய திட்டத்தின் அம்சங்கள் வருமாறு:

* மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இவ்வாறு 50 சதவீதத்திற்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு, பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்திற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழக அரசே ஏற்கும்.

* 2.50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டுதோறும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்.

* ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

* அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 லட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும்.

* புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டபின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.

* பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் (Contributory Pension Scheme) கீழ் பணியில் சேர்ந்து, புதிய தமிழகம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் இடைப்பட்ட காலத்தில் ஓய்வூதியம் இன்றி பணி ஓய்வு பெற்றவர்களுக்கு சிறப்பு கருணை ஓய்வூதியம் வழங்கப்படும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

### 13 ஆயிரம் கோடி ரூபாய்!

புதிய டி.ஏ.பி.எஸ்., திட்டத்தால், ஓய்வூதிய நிதியத்திற்கு கூடுதலாக தமிழக அரசு 13 ஆயிரம் கோடி ரூபாய் அளிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல் தமிழக அரசு ஆண்டுதோறும் 11 ஆயிரம் கோடி ரூபாய் அரசின் பங்களிப்பாக வழங்க வேண்டும்.

### ஜாக்டோ ஜியோ வரவேற்பு

புதிய ஓய்வூதிய திட்டத்தை அறிவித்த உடன், முதல்வர் ஸ்டாலினை சென்னை தலைமை செயலகத்தில் அரசு ஊழியர் சங்கத்தினர் சந்தித்து இனிப்பு ஊட்டி நன்றி தெரிவித்துகொண்டனர். இது குறித்து ஜாக்டோ ஜியோ அமைப்பினர் கூறியதாவது: எதிர்பார்த்ததை முதல்வர் ஸ்டாலின் அறிவித்ததால் ஓய்வூதிய திட்டத்தை வரவேற்கிறோம்.

முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி.

ஜனவரி 6ம் தேதி அறிவிக்கப்பட்ட அரசு ஊழியர்களின் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை ரத்து செய்கிறோம். லட்சக்கணக்கானோருக்கு ஓய்வூதிய திட்டம் அறிவிப்பு மூலம் முதல்வர் ஸ்டாலின் வாழ்வு அளித்துள்ளார். இந்தியாவிற்கே முன்மாதிரியான திட்டத்தை அறிவித்துள்ளார். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## திருப்பூர் வீரபாண்டிய கட்டபொம்மன் இளைஞர் அணி சார்பில் கட்டபொம்மன் பிறந்த நாள் விழா



திருப்பூர், ஜன.4-

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி அருகே சுதந்திர போராட்ட மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 267 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, வீரபாண்டிய கட்டபொம்மன் இளைஞர் அணி சார்பில், அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கியும், மரக்கன்று வழங்கியும் சிறப்பிக்கப்பட்டது. இந்த விழாவினை திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மு.பெ. சாமிநாதன். ஈரோடு மத்திய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் கொடிவேரி கூட்டு குடிநீர் திட்ட நாயகன் தோப்பு என்.டி. வெங்கடாசலம் ஆகியோர் விழாவினை துவக்கி வைத்தனர். இந்த நிகழ்வில் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் சங்கர் சாமி, வீரபாண்டிய கட்டபொம்மன் இளைஞர் அணி கௌஷிக், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஒன்றிய செயலாளர் மொரட்டு பாளையம் பிரபு. ஊத்துக்குளி பேரூர் செயலாளர் திருமூர்த்தி, தெற்கு ஒன்றிய அவைத்தலைவர் வேலுச்சாமி, ஒன்றிய பொருளாளர் கணேசன் பேரூர் பொருளாளர் செல்வராஜ், ஊத்துக்குளி ஒன்றிய துணைச் செயலாளர் காந்தி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு துணை அமைப்பாளர் அருண்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராகவேந்திரன், எ.மகேஷ். ஒன்றிய இளைஞரணி கதிரேசன், ஒன்றிய பிரதிநிதி காளி தாஸ், வார்டு கவுன்சிலர்கள் வேல்முருகன்.மெடிக்கல் கணேஷ, ஐடிவிங் ராஜ வெள்ளியங்கிரி, 5 வது வார்டு சண்முக வடிவேல், பி எல் ஏ 2 சபரிகிரிநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்

## திமுக கொள்கை பிடிப்புடன் இருந்தவர் பேரூர் கழக செயலாளர் ராஜா

### கண் சிகிச்சை முகாமை துவக்கி வைத்து அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, ஜன.04

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில்; பேரூர் கழக செயலாளர் மற்றும் பேரூராட்சி மன்ற தலைவராக இருந்தவர் மறைந்த ச.ராஜா அவர்கள். இவர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மீது அலாதி பற்று கொண்டு 1996ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை முகாமை நடத்தி வருகிறார். அவர் மறைந்த பிறகும் அவரது உறவினர்கள் தொடர்ந்து கண் சிகிச்சை முகாமை நடத்தி வருகின்றனர். காஜி முஸ்தபா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற மாபெரும் கண் சிகிச்சை முகாமிற்கு ரெட்டியார்சத்திரம் ஒன்றிய செயலாளர் ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார்.



திண்டு;க்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, வடக்கு ஒன்றிய செயலாளர் மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீராமபுரம் பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் முருகேசன் வரவேற்று பேசினார்.

முகாமை துவக்கி வைத்து பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மூத்த நிர்வாகியான அண்ணன் ப.க.சிவகுருசாமி போல் திமுகவின் கொள்கை பிடிப்புடன் வாழ்ந்தவர் மறைந்த அன்பு சகோதரர் ராஜா அவர்கள். என் மீது அலாதி பற்றுக் கொண்டதால் 1996ம் ஆண்டு முறை இன்றுவரை தொடர்ந்து இலவச கண் சிகிச்கை முகாமை நடத்தி வருகிறார். சென்ற வருடம் அவர் மறைந்த பிறகும் அவரின் உறவினர்கள் இந்த முகாமை நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

நிகழ்ச்சியில்ஸ்ரீராமபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் அ.சகிலாராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஸ்பெருமாள், கன்னிவாடி பேரூர் கழக செயலாளர் இளங்கோவன், முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், சி.பி.எம். ஒன்றிய பொதுக்குழு உறுப்பினர் ஆதாம்சேட், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மலைச்சாமி, துணை பேரூராட்சி இளைஞரணி அமைப்பாளர் இரா. பால்பாண்டி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரமேஸ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், காமாட்சிபுரம் ஊராட்சி முன்னாள் செயலாளர் கமலகண்ணன், பேரூர் கழக துணைச் செயலளார் சுகப்பிரியா, பொருளாளர் துரையன், மாவட்ட பிரதிநிதி சாகுல்ஹமீது, பேரூர் இளைஞரணியைச் சேர்ந்த கமால், சையது அபுதாஹிர், 5வது வார்டு செயலாளர் அக்பர், மற்றும் ஒன்றிய பிரதிநிதிகள், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், கழக சார்பு அணியினர் உட்பட பலர் கலந்துகொண்டனர். நிறைவாக பேரூர் கழக துணைச் செயலாளர் கா.பாலமுருகன் நன்றி கூறினார்.

# “போராடும் இடைநிலை ஆசிரியர்களை கைவிட மாட்டோம்” அமைச்சர் அன்பில் மகேஸ் உறுதி

சென்னை, ஜன.4-

“போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இடைநிலை ஆசிரியர்களை கைவிட மாட்டோம். நல்ல முடிவு எடுப்போம்” என அமைச்சர் அன்பில் மகேஸ் உறுதியளித்துள்ளார்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ்டிஏ) சார்பில் சென்னையில் டிச.26 முதல் தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதனையொட்டி, இது குறித்து முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் அன்பில் மகேஸ் உள்ளிட்டோர் முக்கிய ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அமைச்சர் அன்பில் மகேஸ் சென்னையில்



இன்று செய்தியாளர்களிடம் பேசும்போது, “போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இடைநிலை ஆசிரியர்கள் என்னுடைய குடும்ப உறுப்பினர்களை போன்றவர்கள். அவர்களை நாங்கள் கைவிட மாட்டோம்.

நாங்கள் ஒரு கட்டத்தில் நிற்கிறோம். போராட்டம் நடத்துபவர்கள் ஒரு கட்டத்தில் இருக்கிறார்கள். நல்ல முடிவை எடுப்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதை போராட்டமாகவோ, ஆர்ப்பாட்டமாகவோ நான் பார்க்கவில்லை. தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாகவே ஆசிரியர்கள் போராடுகிறார்கள்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, “போராட்டம் குறித்து எஸ்எஸ்டிஏ பொதுச் செயலாளர் ஜே. ராபர்ட் கூறும்போது, “ஒற்றை கோரிக்கையை வலியுறுத்தி போராடி வருகிறோம். கடந்த தேர்தலின் போது எங்கள் கோரிக்கையை ஏற்ற திமுக, அதை தேர்தல் வாக்குறுதியாகவும் அறிவித்தது. ஆனால், இதுவரை நிறைவேற்றவில்லை. ஊதிய முரண்பாடு களையப்படாவிட்டால், பள்ளிகள் திறந்த பிறகும் போராட்டம் தொடரும். தமிழக அரசு எங்களை அழைத்துப் பேசி கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்” என்றார்.



# “அன்பைச் சொல்லித்தரும் ஆன்மிகத்தை வம்பு செய்யப் பயன்படுத்துகிறார்கள்” முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு

திருச்சி, ஜன.4-

அன்பு செய்யச் சொல்லித்தர வேண்டிய ஆன்மிகத்தை சில கும்பல் வம்பு செய்யப் பயன்படுத்துகிறது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மேற்கொள்ளும் சமத்துவ நடைபயண தொடக்க விழா திருச்சி தென்னூர் உழவர் சந்தை திடலில் நேற்று நடைபெற்றது. நடைபயணத்தை தொடங்கி வைப்பதற்கு முன்னதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: வைகோ மேற்கொள்ளும் சமத்துவ நடைபயண நிகழ்ச்சி தான், ஆங்கில புத்தாண்டின் எனது முதல் நிகழ்ச்சி. பொதுவாழ்க்கையில் தமிழகத்தில் தன் காலடி படாத இடங்களே இல்லை என மக்கள் பிரச்சினைகளுக்காக நடைபயணம் மேற்கொண்டவர் வைகோ. இளைஞர்களுக்கு நல் வழிகாட்டவும், அவர்களின்



நலனுக்காகவும், எதிர்கால நன்மை, வளர்ச்சிக்காகவும் செயலாற்றும் இயக்கம் தான் திராவிட இயக்கம்.

தள்ளாத 95 வயதிலும் தமிழர்களுக்காக உழைத்து இறுதி மூச்சு வரை பாடுபட்டவர் பெரியார். அவர் வழியில் வந்த கருணாநிதி 80 ஆண்டுகால பொதுவாழ்வுக்கு சொந்தக்காரர். 16 வயதில் மாணவநேசன் பத்திரிகை ஆரம்பித்து, இளைஞர்களிடம் உறவாடிய அவர், 89 வயதிலும் முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்களிலும் அரசியல் செய்தார். அப்படிப்பட்ட திராவிட பல்கலைக்கழகத்தில் படித்தவர் வைகோ. இந்த ஸ்டாலினும் அதே பல்கலைக்கழக மாணவன் தான்.

மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு நீதிகேட்டு நெடும் பயணம் தொடங்கியபோது கருணாநிதியுடன் நடந்தவர் வைகோ. இன்று சமத்துவ நடைபயணம் மேற்கொள்கிறார். இளைஞர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் போதைப் பொருட்களை நிச்சயம் ஒழிக்க வேண்டும் என்பதில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. போதையின் பாதையில் செல்லும் இளைஞர்களை தடுத்து, அவர்களின் நலன் காக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மத்திய அமைச்சர்கள் மற்றும் பதவியில் இருப்பவர்கள் வெறுப்பு கருத்துகளை பேசி, இரு பிரிவினருக்கு இடையே மோதலை தூண்டும் விதமாக செயல்படுகின்றனர். தனிப்பட்ட கொள்கைகளுக்கு இந்திய நாட்டின் ஒருமைப்பாடு, அமைதியை சீர்குலைக்கும் நாசகார வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் அச்சத்தில் வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஊரே ஒன்றுகூடி மகிழ்ச்சியாக இருந்த காலம் போய், ஒருத்தருக்கு ஒருத்தர் எதிரியாக கட்டமைக்கும் வேலையை பிளவுவாத சக்திகள் இன்று செய்கின்றன. அன்பு செய்யச் சொல்லித்தர வேண்டிய ஆன்மிகத்தை சில கும்பல் வம்பு செய்ய பயன்படுத்துகிறது.

இந்த நிலையில் தான், போதைப் பொருள் ஒழிப்பு, சாதி, மத மோதல் தடுப்பு உள்ளிட்ட நாட்டுக்குத் தேவையான கருத்துகளை வலியுறுத்தி வைகோ இந்த சமத்துவ நடைபயணத்தை தொடங்கி உள்ளார். வைகோவின் நடைபயணம் நிச்சயம் புதிய வரலாற்றை படைக்கும். காந்தி, மாவோ பயணங்கள் வரலாற்றில் புரட்சி ஏற்படுத்தியதுபோல, வைகோவின் நடைபயணமும் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்த பயணத்தின் தாக்கத்தை சமூக வலைதளத்தில் கொண்டு போய் சேர்த்து, இளைஞர்களின் பேசுபொருளாக்க வேண்டியது அனைவரது கடமை. நடைபயணத்தை வைகோ கவனமாக மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற கடுமையான பயணங்களை இனி அவர் மேற்கொள்ளக்கூடாது. தனது உடல்நலனை பாதுகாக்க வேண்டும் என அவரிடம் அன்பான வேண்டுகோளை வைக்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

# தவெக உடன் கூட்டணி பேச்சுவார்த்தையா? காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் திட்டவட்ட மறுப்பு

சென்னை, ஜன.4-

“தவெக உடன் காங்கிரஸ் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்துவதாக வரும் தகவல் வதந்தி. திமுகவுடன் மட்டுமே கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்” என காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தெரிவித்தார்.

சென்னை சத்திய மூர்த்தி பவனில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகையுடன் இணைந்து செய்தியாளர்களை சந்தித்த காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், “தவெக உடன் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்துவதாக வரும் தகவல் வதந்தி. திமுகவுடன் மட்டுமே கூட்டணி குறித்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம்.

திமுகவுடன் தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை முன்கூட்டியே தொடங்கி சுமுகமாக நடைபெற்று வருகிறது. திமுகவுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையை விரைவில் இறுதி செய்வோம்.

திமுகவிடம் காங்கிரஸ் 38 தொகுதிகள் கேட்டதாக கூறியது யார்? திமுக கூட்டணியில் காங்கிரஸ் எத்தனை தொகுதிகளில் போட்டியிடும் என்பதை விரைவில் அறிவிப்போம்.

திமுக காங்கிரஸ் கூட்டணி நம்பகத்தன்மை வாய்ந்தது. எந்தக் கட்சியாக இருந்தாலும் ஆட்சி அதிகாரத்தை விரும்பும். எம்.பி ஜோதிமணி கூறிய புகார் குறித்து விசாரிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்போம்.

சட்டப்பேரவை தேர்தலுக்காக காங்கிரஸ் சார்பில் 5 ஆயிரம் விருப்ப மனுக்களை வாங்கியுள்ளோம். மதிமுக நடத்திய நடைபயண தொடக்க விழாவில் கலந்து கொள்ளாதது எங்கள் கட்சியின் முடிவு. அதுபற்றி கருத்து தெரிவிக்க விரும்பவில்லை” என்று தெரிவித்தார்.

# “திமுகவுக்கு ஜால்ரா போடுபவர்கள்தான் காங்கிரஸ் கட்சியினர்!” அண்ணாமலை

வேலூர், ஜன.4-

“காங்கிரஸ் கட்சியினர் டெல்லிக்கும், திமுகவுக்கும் ஜால்ரா போட்டு கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழக மக்களுக்காக பேசும் காங்கிரஸ்காரர்கள் யாரும் இல்லை” என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வேலூரில் செய்தியாளர்களிடம் பேசும்போது, “திமுக ஆட்சிக்கு வந்த பிறகு பெண்களுக்கு எதிரான குற்றங்கள், கஞ்சா புழக்கம், வன்முறை அதிகமாகி இருக்கிறது.

கஞ்சா புழக்கத்தால் இளைஞர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், மடைமாற்றம் செய்வதற்கு, முதல்வர் மத்திய அரசின் மீது பழி போடும் விதமாக பேசிவருகிறார். வெளிநாட்டில் இருந்து



வரும் போதைப் பொருளைத்தான் மத்திய அரசு தடுக்கும்.

‘நான் தமிழக முதல்வராக கஞ்சா புழக்கத்தை கட்டுப்படுத்துவதில் தோற்றுவிட்டேன்’ என முதல்வர் ஒப்புக்கொள்ளட்டும். அதை விடுத்து, சாக்குபோக்கு சொல்லிவிட்டு மத்திய அரசு மீது பழிபோடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழகத்தில் இரண்டு குழுக்கள்தான் இருக்கிறது. ஒரு குழு டெல்லிக்கு ஜால்ரா அடிக்கிறது. மற்றொரு குழு முதல்வர் ஸ்டாலினுக்கு ஜால்ரா அடிக்கிறது. காங்கிரஸ் கட்சியின் கடையை சாத்தி விடலாம். அது அழிந்து வரும் கட்சி. அதற்கு தமிழக காங்கிரஸ் தலைவரே ஒரு சான்று.

ஒரு வேளை விஜய்யுடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்தால், ப.சிதம்பரம் தனி கட்சி அமைத்து திமுகவுடன் கூட்டணி வைப்பார். காலையில் தான் இது குறித்து ஒரு நாளிதழில் படித்தேன். இன்றைக்கு இருப்பது இந்திரா காங்கிரஸ்.

தூய்மை பணியாளர்கள், இடைநிலை ஆசிரியர்கள் என அனைவரும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு கிடைத்த புத்தாண்டு பரிசு கைதுதான். ஆனால் முதல்வர் ஸ்டாலின் வேறு உலகத்தில் இருக்கிறார். திமுக ஆட்சி வேண்டாம் என மக்கள் நினைத்துவிட்டார்கள். மக்களே தெளிவான முடிவை தருவார்கள்” என்று அண்ணாமலை கூறினார்

# “பாஜக கூட்டணிக்கு விஜய் வந்தால் நல்லது” தமிழிசை விருப்பம்

தூத்துக்குடி, ஜன.4-

பலமான அதிமுக பாஜக கூட்டணிக்கு விஜய் வந்தால் நல்லது என, தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: போதையை ஒழிப்பதற்காக பாதயாத்திரையை வைகோ தொடங்கி இருக்கிறார். அதனை முதல்வர் தொடங்கி வைக்கிறார். போதையை உற்பத்தி செய்வது, விற்பது, ஆதரிப்பது எல்லாம் அவர்கள்தான். எனவே, அறிவாலயத்தை நோக்கித் தான் அவர்கள் பாதயாத்திரை செல்ல வேண்டும்.

திமுக கூட்டணிக்குள் குழப்பங்கள் ஆரம்பித்து விட்டன. காங்கிரஸ் கட்சியின் நிலை குறித்து ஜோதிமணி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். தமிழ்நாட்டில் கடன் சுமைஅதிகரித்து விட்டதாக காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த பிரவீன் சக்கரவர்த்தி கூறியுள்ளார். ஆனால், கடனை வைத்து ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை மதிப்பிட முடியாது என ப.சிதம்பரம் கூறியுள்ளார். அந்த அளவுக்கு தமிழக காங்கிரஸார் அறிவாலயத்தின் அடிமைகளாக மாறிவிட்டனர்.

அதிமுக, பாஜக ஆகிய 2 கட்சிகளுமே அசுர சக்திகள். நாங்கள் அனுபவத்தில் பலமாக இருக்கிறோம். விஜய் பலமாக இருப்பதாக அனுமானத்தில் கூறிக் கொண்டிருக்கிறீர்கள். அனுபவத்தில் பலமாக இருப்பவர்களுடன், அனுமானத்தில் பலமாக இருப்பவர்கள் வந்தால் நல்லது. வரவில்லை என்றால் எங்களுக்கு எதுவும் பிரச்சினை கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

# லஞ்சம் வாங்கிய ஐஆர்எஸ் பெண் அதிகாரி கைது: ரூ.1.6 கோடி ரொக்கம், தங்கம், வெள்ளி பறிமுதல்

லக்னோ, ஜன.4-

தொழிலதிபரிடம் லஞ்சம் வாங்கிய இந்திய வருவாய் பணி (ஐஆர்எஸ்) பெண் அதிகாரி பிரபா பண்டாரி கைது செய்யப்பட்டார். அவரது வீட்டில் இருந்து ரூ.1.6 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. ஏராளமான தங்க, வெள்ளி நகைகள், பல கோடி மதிப்புள்ள சொத்து ஆவணங்களும் கைப்பற்றப்பட்டு உள்ளன.

உத்தர பிரதேசம், ஜான்சியில் ஜிஎஸ்டி அலுவலகம் செயல்படுகிறது. அங்கு துணை ஆணையராக (ஐஆர்எஸ் அதிகாரி) பிரபா பண்டாரி பணியாற்றி வந்தார். கடந்த 18ம் தேதி அவரது தலைமையிலான ஜிஎஸ்டி அதிகாரிகள், ஜான்சி நகரில் செயல்படும் ஜெய் அம்பே பிளைவுட்ஸ், ஜெய் துர்கா ஹார்ட்வேர் நிறுவனங்களில் ஆய்வு செய்தனர். அப்போது இரு நிறுவனங்களிலும் பல கோடி ரூபாய் வரிஏய்ப்பு செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

சட்ட நடவடிக்கைகளில் இருந்து தப்பிக்க அந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் லோகேஷ், ராஜு மங்தானி ஆகியோர் லஞ்சம் கொடுக்க முன்வந்



தனர். இருவரும் ஜான்சி ஜிஎஸ்டி அலுவலக கண்காணிப்பாளர் அனில் குமாரை அவரது வீட்டில் சந்தித்து பேசினர். அப்போது ரூ.1.5 கோடி லஞ்சம் கொடுக்க பேரம் பேசப்பட்டது.

இதுதொடர்பான ரகசிய தகவல் சிபிஐ அதிகாரிகளுக்கு கிடைத்தது. அவர்கள் ஜான்சியில் முகாமிட்டு ஜிஎஸ்டி அலுவலக அதிகாரிகளின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணித்தனர்.

கடந்த 30ம் தேதி வழக்கறிஞர் நரேஷ் குப்தா என்பவர், ஜிஎஸ்டி கண்காணிப்பாளர் அனில் குமார், மற்றொரு மூத்த அதிகாரி அஜய் சர்மாவை சந்தித்து ரூ.70 லட்சம் லஞ்ச பணத்தை வழங்கினார். அங்கு மறைந்திருந்த சிபிஐ அதிகாரிகள், 3 பேரையும் கைது செய்தனர்.

மொபைல் போன் அழைப்பு: சிபிஐ அதிகாரிகளின் உத்தரவின்பேரில் ஜிஎஸ்டி கண்காணிப்பாளர் அனில்குமார், துணை ஆணையர் பிரபா பண்டாரியிடம் மொபைல் போனில் பேசினார்.

“முதல்கட்டமாக ரூ.70 லட்சம் வந்துவிட்டது” என்று அனில்குமார் கூற, எதிர்முனையில் பேசிய பிரபா பண்டாரி, “வெரிகுட், அந்த பணத்தை தங்கமாக மாற்றி என்னிடம் கொடுங்கள்” என்று உத்தரவிட்டார். இந்த மொபைல்போன் அழைப்பால், லஞ்ச கும்பலின் தலைவியாக அவர் செயல்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.

டெல்லியில் உள்ள சொகுசு வீட்டில் பிரபா பண்டாரி தங்கியிருந்தார். உடனடியாக டெல்லி விரைந்த சிபிஐ அதிகாரிகள் அவரை கைது செய்தனர். அவரது வீட்டில் சிபிஐ அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர். அப்போது ரூ.1.6 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் ஏராளமான தங்க நகைகள், வெள்ளி கட்டிகள், பல கோடி மதிப்புள்ள சொத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இதேபோல ஜிஎஸ்டி அதிகாரிகள் அனில் குமார், அஜய் சர்மா ஆகியோரும் ஏராளமான சொத்துகளை வாங்கி குவித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

# காங்கிரஸ் பாஜகவினர் மோதல்: கர்நாடகாவின் பெல்லாரியில் 144 தடை உத்தரவு

பெங்களூரு, ஜன.4-

கர்நாடகாவின் பெல்லாரியில் பேனர் வைப்பதில் காங்கிரஸ், பாஜக எம்எல்ஏக்களின் ஆதரவாளர்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

அப்போது நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். அங்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 2 பாஜக எம்எல்ஏக்கள் உட்பட 11 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கர்நாடகாவின் பெல்லாரி மாவட்டம், ஹவம்பாவில் காங்கிரஸ் பிரமுகர் செனல் சேகர் ஜனவரி 3ம் தேதி வால்மீகி சிலை அமைக்க திட்டமிட்டார். பெல்லாரி காங்கிரஸ் எம்எல்ஏ நரபரத் ரெட்டியின் தீவிர ஆதரவாளரான இவர் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வால்மீகி சதுக்கம் பகுதியில் பேனர் அமைத்தார். இந்த பேனர், கங்காவதி பாஜக எம்எல்ஏவும் முன்னாள் அமைச்சருமான ஜனார்த்தன ரெட்டியின் வீட்டுக்கு எதிரில் இருந்தது.

இதனை ஜனார்த்தன ரெட்டியின் ஆதரவாளர்களும் பாஜகவினரும்



கிழித்து எறிந்தனர். இதனால் காங்கிரஸ் எம்எல்ஏ நரபரத் ரெட்டியின் ஆதரவாளர்களுக்கும் பாஜகவினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றி இரு தரப்பினரும் கற்கள், உருட்டு கட்டைகளால் தாக்கினர். இதில் 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அப்போது ஜனார்த்தன ரெட்டியின் நெருங்கிய நண்பரும் பாஜக பிரமுகருமான சதீஷ் ரெட்டியின் மெய்க்காப்பாளர் பசவராஜ் துப்பாக்கியால் சுட்டதில் காங்கிரஸ் பிரமுகர் ராஜசேகர் (32) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விரைந்து வந்த பெல்லாரி போலீஸார் தடியடி நடத்தி மோதலை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இரு தரப்பினரும் நடத்திய கல்வீச்சில் 3 போலீஸார் காயமடைந்தனர்.

பதற்றமான சூழல் நிலவுவதால் ஹசம்பாவியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அங்கு 500க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

11 பேர் மீது வழக்குப் பதிவு: இந்நிலையில் பெல்லாரி போலீஸார் பாஜக எம்எல்ஏக்கள் ஜனார்த்தன ரெட்டி, ராமலு, முன்னாள் அமைச்சர் சோமசேகர் ரெட்டி உட்பட 11 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.



# ரூ.41,863 கோடி முதலீட்டில் 22 மின்னணு உதிரிபாக உற்பத்தி திட்டத்துக்கு ஒப்புதல்

புதுடெல்லி, ஜன.4-

ரூ.41,863 கோடி முதலீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள 22 மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் நேற்று கூறியுள்ளதாவது: டிக்சன், சாம்சங் டிஸ்பிளே, பாக்ஸ்கான், ஹிண்டால்கோ உள்ளிட்ட நிறுவனங்களின் 22 மின்னணு உதிரிபாக உற்பத்தி திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.41,863 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படும் இந்த திட்டங்களின் மூலம் 33,791 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மேலும், இந்த 22 திட்டங்களின் மூலமாக ரூ.2,58,152 கோடிக்கு மின்னணு உதிரிபாக பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வெள்ளிக்கிழமை ஒப்புதல் கடிதங்களை வழங்கினார்.

மின்னணு உதிரிபாக உற்பத்திக்கான இந்த ஒப்புதலில் மொபைல் உற்பத்தி, தொலைத்தொடர்பு, நுகர்வோர் மின்னணுவியல், பாதுகாப்பு மின்னணுவியல் உட்பட பல்வேறு துறைகளில் பயன்படும் 11 இலக்கு துறைப் பொருட்களின் உற்பத்தி அடங்கும்.



# பெங்களூரு கன்னியாகுமரி வரை 70 வயதில் 5 நாட்களில் சைக்கிளில் 702 கி.மீ. பயணித்த பாஜக எம்எல்ஏ

பெங்களூரு, ஜன.4-
கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள மல்லேஸ்வரம் தொகுதி பாஜக எம்எல்ஏ சுரேஷ் குமார். 70 வயதான இவர் எளிமையானவர். சுறுசுறுப்பாக செயல்படுபவர், அனைத்து தரப்பினரிடம் நட்பு பாராட்டுவார். அண்மையில் பெங்களூரு போக்குவரத்து போலீஸாருடன் இணைந்து ஒரு வாரம் சாலை விதிமுறைகள் விழிப்புணர்வுக்கு தன்னார்வலராக பணியாற்றினார்.

இந்நிலையில், சுரேஷ்குமார் கடந்த டிசம்பர் 23ம் தேதி மல்லேஸ்வரத்தில் இருந்து சைக்கிள் கிளப் உறுப்பினர்கள் 12 பேருடன் கன்னியாகுமரிக்கு புறப்பட்டார். தினமும் 12 முதல் 15 மணி நேரம் சைக்கிள் ஓட்டினார். இதன் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 130 முதல் 155 கி.மீ. தூரத்தை கடந்தார். 5வது நாளின் முடிவில் 702 கி.மீ. தூரம் பயணித்து கன்னியாகுமரியை வெற்றிகரமாக அடைந்தார்.

இது குறித்து பிரதமர் மோடி தனது சமூகவலைதள பக்கத்தில், ''பாஜக எம்எல்ஏ சுரேஷ்குமார் 5 நாட்களில் 702 கி.மீ. தூரம் சைக்கிளில் பயணித்திருப்பது சாதனை முயற்சி. அவரது இந்த முயற்சிக்கு எனது பாராட்டுகள். அவரது வயதை கடந்து உற்சாகமாக, நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதை காட்டுகிறது. அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாராட்டினேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

# சத்தீஸ்கரில் நக்சலைட்டுகள் 14 பேர் சுட்டுக்கொலை



ராய்ப்பூர், ஜன.4-
சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நக்சலைட்டுகள் 14 பேர் கொல்லப்பட்டனர்.

சத்தீஸ்கரின் பிஜாப்பூர், சுக்மா பகுதிகளில் நக்சலைட்டுகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் போலீசாருடன் இணைந்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அங்கு பதுங்கியிருந்த நக்சல்கள், பாதுகாப்பு படையினர் மீது துப்பாக்கியால் சுட்டனர். படையினரும் தக்க பதிலடி கொடுத்தனர்.

இரண்டு இடங்களில் பாதுகாப்பு படையினர் நடத்திய என்கவுன்டரில் நக்சலைட்டுகள் 14 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் அப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினர் சந்தேகப்படுகின்றனர். இதனால் அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடந்து வருகிறது. இந்த ஆண்டு இதுவரை சத்தீஸ்கரில் நக்சலைட்டுகள் 285 பேர் என்கவுன்டர்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுபுறம், பாதுகாப்பு படையினரின் அதிரடி நடவடிக்கையால் நக்சலைட்டுகள் போலீசாரிடம் ஆயுதங்களுடன் சரண் அடையும் நிகழ்வுகளும் நடக்கிறது. வரும் மார்ச் 31ம் தேதிக்குள் இந்தியாவில் நக்சலிசத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் காலக்கெடு விதித்துள்ள நிலையில் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையை பாதுகாப்பு படையினர் தீவிரப்படுத்தி உள்ளனர்.



# சபரிமலையில் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணி: மத்திய அதிவிரைவுப்படையும் களம் இறங்கியது

சபரிமலை, ஜன.4-
சபரிமலையில் மகர விளக்கு சீசனில் பக்தர்கள் கூட்டம் அதிகமாகி வரும் நிலையில் அதனை ஒழுங்குபடுத்தும் பணியில் கேரள போலீசுடன் மத்திய அதிவிரைவுப்படை வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சபரிமலையில் ஜன.14 ல் மகரஜோதி விழா நடைபெற உள்ள நிலையில் கடந்த 30 ம் தேதி மாலை நடை திறக்கப்பட்டு மகர விளக்கு சீசன் தொடங்கியுள்ளது. அன்று முதல் தினமும் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்கின்றனர். கூட்டம் அதிகமாக உள்ளதால் சிறுவர், சிறுமியுடன் வருபவர்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர். பல இடங்களிலும் நெரிசலில் சிக்கும் இவர்களை போலீசார் மீட்டு தனியாக சன்னிதானம் அருகே கொண்டு செல்கின்றனர்.

மகரஜோதி நாள் நெருங்கும்போது பக்தர்கள் கூட்டம் மேலும் அதிகமாகும் என்பதை கருத்தில் கொண்டு மத்திய அதிவிரைவு படை போலீசாரையும் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி நேற்று காலை சன்னிதானம் முன்புறம் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் துணை கமாண்டர் பிஜு ராம் அறிவுரைகளை வழங்கினார். மத்திய அதிவிரைவு படையில் மொத்தம் 140 போலீசார் உள்ளனர்.

மரகூட்டம், நடைப்பந்தல், திருமுற்றம், சன்னிதானம், பஸ்மக் குளம், அரவணை கவுன்டர் ஆகிய இடங்களில் இவர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

டிச., 30, 31ல் பக்தர்கள் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. எனினும் நிலைமை சமாளிக்கப்பட்டதாக போலீசார் கூறுகின்றனர்.


மலையேறி வரும் பக்தர்களுக்கு உடலில் ஏற்படும் வலி, சுளுக்கு உள்ளிட்டவற்றை சரி செய்வதற்காக இலவச பிசியோ தெரபி மையம் சன்னிதானத்தில் செய்யப்படுகிறது.

சபரிமலையில் நடப்பு சீசனில் எக்சைஸ் துறை சார்பில் 224 சோதனை மற்றும் 503 வாகன சோதனைகளும் நடத்தப்பட்டுள்ளது.

239 ஓட்டல்கள் ஆய்வு செய்யப்பட்டது. தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்தல் தொடர்பாக 895 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

12.4 கிலோ புகையிலை, 10 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து ஒரு லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டதாக எக்சைஸ் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வெனிசுலாவில் அடுத்தடுத்து 7 வெடிப்புச் சம்பவங்கள்: தாக்குதலை தொடங்கியதா அமெரிக்கா?



கராகஸ், ஜன.4-
வெனிசுலா தலைநகர் கராகஸில் அதிகாலை 7 இடங்களில் அடுத்தடுத்து வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இவை வெனிசுலா ராணுவ தளங்கள் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. பயங்கர சத்தத்துடன் கரும்புகை கிளம்பியதால் பொதுமக்கள் அச்சமடைந்ததாகத் தகவல்கள் வருகின்றன. மேலும், அப்பகுதியில் விமானம் ஒன்று தாழப் பறந்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. அது போர் விமானமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

ஆனால், இந்த வெடிப்புச் சம்பவங்களுக்கு காரணம் என்னவென்று இதுவரை உறுதி செய்யப்படவில்லை. இந்நிலையில், கடந்த சில நாட்களாகவே வெனிசுலா மீது அமெரிக்கா தாக்குதலுக்கு ஆயத்தமாகி வருவதாக சொல்லப்பட்ட நிலையில், இந்தத் தாக்குதலை அமெரிக்காவே நடத்தியிருக்கலாம் என்று வெளிநாட்டு ஊடகங்கள் கணிக்கின்றன.

இருப்பினும், வெனிசுலா தலைநகரில் நிகழ்ந்த வெடிப்புச் சம்பவங்கள் குறித்து அந்நாட்டு ராணுவமோ அல்லது அமெரிக்காவின் ராணுவத் தலைமையகமான பென்டகனோ எதுவும் சொல்லவில்லை.

ட்ரம்ப் எச்சரிக்கையைத் தொடர்ந்து... முன்னதாக, அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோவை பதவி விலகுமாறு பலமுறை எச்சரித்து வந்தார். அமெரிக்காவுக்குள் ஃபென்டானில் போதைப் பொருள் ஊடுருவ வெனிசுலா அதிபரே காரணம் என்று குற்றஞ்சாட்டி வருகிறார். அமெரிக்கா மீது வெனிசுலா 'போதைப் பொருள் பயங்கரவாதம்' நிகழ்த்துவதாகக் குற்றஞ்சாட்டி வருகிறார். மேலும், வெனிசுலாவுக்கு பொருளாதாரத் தடைகள் விதித்ததோடு, அதன் கடற்பரப்புக்குள் எண்ணெய்க் கப்பல்கள் போக்குவரத்தையும் முடக்கிவைத்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதலே கரீபியன் கடற்பகுதியில் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் ரோந்து, கண்காணிப்பில் தீவிரமாக ஈடுபடுவதோடு, சில போர்க் கப்பல்களும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய சூழலில் இன்று காலை நிகழ்ந்துள்ள வெடிப்புச் சம்பவங்கள் அனைத்தும் அமெரிக்கா மீதான சந்தேகத்தை வலுக்கச் செய்வதாக வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. இத்தனைக்கும், நேற்று வெனிசுலா அரசு அமெரிக்கா முன்வைக்கும் போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டு தொடர்பாக விரிவான ஆலோசனைக்கு தயாராக இருப்பதாகவும், அதன் அடிப்படையில் ஒப்பந்தத்தை எட்ட விரும்புவதாகவும் கூட பகிரங்கமாக அறிவித்திருந்தது கவனிக்கத்தக்கது.

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோ 'ட்ரம்ப் எண்ணமே வேறு..' இந்த நிலையில், வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோ, ட்ரம்ப் தங்கள் நாட்டை வேறு எண்ணத்தோடு குறிவைக்கிறார். அவருக்கு போதைப் பொருள் தடுப்பு, சட்ட விரோத குடியேறிகளைக் கட்டுப்படுத்துவது ஆகியன வெறும் சாக்கு தான் அவரது இலக்கு வெனிசுலாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே என்றார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை மடுரோவில் ஒரு பேட்டி வெளியானது. அந்த தொலைக்காட்சிப் பேட்டியில் மடுரோ, “ட்ரம்ப் வெனிசுலாவில் ஆட்சி மாற்றம் நிகழ வேண்டும் அதன் மூலம் இங்குள்ள எண்ணெய் வளங்கள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார்” என்று வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.



# படகுப் போட்டி வெள்ளோட்டத்தில் ஏரியில் விழுந்த ஆட்சியர்

அமராவதி, ஜன.4-
ஆந்திராவின், கோனசீமா டாக்டர் அம்பேத்கர் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை (சங்கராந்தி) பிரம்மாண்டமாக கொண்டாடுவது வழக்கம். இங்கு சேவல் பந்தயங்கள், படகு சவாரி, பட்டம் விடும் போட்டிகள் 4 நாட்கள் நடைபெறும்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வரும் 11ம் தேதியே நிகழ்ச்சிகள் தொடங்கப்பட உள்ளன. இதன் ஒரு பகுதியாக ஆத்திரேய புரம் புலிதிண்டி ஏரியில் நேற்று படகு போட்டிக்கான வெள்ளோட்டம் நடைபெற்றது. அம்பேத்கர் கோனசீமா மாவட்ட ஆட்சியர் மஹேஷ்குமார் வெள்ளோட்டத்தை மேற்பார்வையிட்டார்.

அப்போது மஹேஷ்குமாரும் ஒரு படகில் பாதுகாப்பு கவசம் அணிந்து துடுப்புகளை போட்டபடி சவாரி செய்தார். யாரும் எதிர்பாராத வகையில் திடீரென மாவட்ட ஆட்சியர் மஹேஷ்குமார் சென்ற படகு ஏரியில் கவிழ்ந்தது. இதில் மாவட்ட ஆட்சியரும் மற்றொருவரும் ஏரியில் விழுந்தனர். அங்கிருந்தவர்கள் உடனடியாக இருவரையும் காப்பாற்றினர்.

# தெரு நாய் விஷயத்தில் ஆம் ஆத்மி மீது டெல்லி போலீஸ் வழக்கு



புதுடெல்லி, ஜன.4-
தெரு நாய்கள் பிரச்சினை தொடர்பாக ஒருங்கிணைந்து செயல்பட பள்ளிகளில் சிறப்பு அதிகாரியை நியமிக்க வேண்டும் என டெல்லி கல்வித் துறை சுற்றறிக்கை அனுப்பியது.

இது தொடர்பாக சமூக ஊடகத்தில் கருத்து தெரிவித்த ஆம் ஆத்மி கட்சி நிறுவனர் கேஜ்ரிவால், “மாணவர்களுக்கு பாடம் நடத்துவதற்கு பதிலாக டெல்லி ஆசிரியர்கள் தெரு நாய்களை கணக்கெடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்” என பதிவிட்டிருந்தார்.

சமூக ஊடகத்தில் தவறான தகவல் பரப்புவது தொடர்பாக கேஜ்ரிவால் மீது போலீஸில் கல்வித்துறை புகார் அளித்தது. இதையடுத்து போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர்.




# அரசுப்பள்ளிகளில் தினமும் இனி 10 நிமிடம் செய்தித்தாள் வாசிப்பு கட்டாயம்; ராஜஸ்தானில் உத்தரவு

ராஜஸ்தான், ஜன.4-
ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளில் தினமும், இனி 10 நிமிடம் செய்தித்தாள் வாசிப்பு கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. இந்த புதிய உத்தரவு பல்வேறு தரப்பினர் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

நடப்பு நிகழ்வுகள் குறித்து தெரிந்து கொள்ளவும், வாசிப்பு பழக்கத்தை வலுப்படுத்தவும், மாணவர்களிடையே மொழித்திறனை மேம்படுத்தவும், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும், தினசரி 10 நிமிடம் செய்தித்தாள் வாசிக்க வேண்டும் என்ற நடைமுறையை அந்நாட்டு அரசு கொண்டு வந்துள்ளது. ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் குறைந்தது தினமும் இரண்டு செய்தித்தாள்கள் வாங்க வேண்டும்.

அது ஒன்று ஆங்கில மொழியிலும், மற்றொன்று ஹிந்தி மொழியிலும் இருக்க வேண்டும். காலையில் பிரார்த்தனைக் கூட்டத்தின் போது செய்தித்தாளை வாசிக்க வேண்டும். இது குறித்து பள்ளிக்கல்வி துறை செயலாளர் கிருஷ்ணா குணால் அரசு பள்ளிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: தலையங்கங்கள், விளையாட்டு, தேசிய மற்றும் உலக செய்திகளை படிக்க வேண்டும்.

காலையில் பிராரத்தனை கூட்டத்தின் போது அன்றைய தினம் செய்தித்தாள் வாசிக்கும் மாணவர் பள்ளிக்கு 30 நிமிடங்களுக்கு முன்பே வந்து தயாராக வேண்டும். மாணவர்களுக்கு தினமும் கூடுதலாக 5 புதிய சொற்கள் மற்றும் அவற்றின் விளக்கங்களை கற்றுக் கொடுக்க வேண்டும். 6 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு முக்கிய தலையங்கங்கள் மற்றும் செய்திகளை படிக்கும் பொறுப்பு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பதி கோயிலில் குவியும் பக்தர்கள்: டிக்கெட் இல்லாமல் சர்வ தரிசனம் ஏற்பாடு



திருமலை, ஜன.4-
சொர்க்க வாசல் தரிசனத்திற்காக டிக்கெட் இல்லாமல் வரும் பக்தர்களுக்கு நேற்று முதல் வரும் 8ம் தேதி வரை திருப்பதி தேவஸ்தானம் அனுமதி வழங்கி உள்ளதை தொடர்ந்து, திருமலைக்கு பக்தர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த டிசம்பர் மாதம் 30ம் தேதி சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. ஜனவரி மாதம் 8ம் தேதி வரை தொடர்ந்து 10 நாட்களுக்கு சொர்க்க வாசல் தரிசனத்திற்கு பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என தேவஸ்தானம் தெரிவித்து இருந்தது.

ஆனால், முதல் 3 நாட்கள், அதாவது டிசம்பர் 30, 31 மற்றும் ஜனவரி 1ம் தேதி ஆகிய 3 நாட்களும் ஏற்கெனவே ஆன்லைன் மூலம் குலுக்கல் முறையில் தரிசன டிக்கெட்டுகள் வழங்கப்பட்டு விட்டன. ஆதலால், மற்றவர்களுக்கு அனுமதி இல்லை என தேவஸ்தானம் அறிவித்தது.

இந்நிலையில், நேற்று 2ம் தேதி முதல் 8ம் தேதி வரை டிக்கெட்டுகள் இல்லாவிட்டாலும் சுவாமியை பக்தர்கள் தர்ம தரிசனம் வாயிலாக தரிசிக்கலாம் என தேவஸ்தானம் அறிவித்ததை தொடர்ந்து, 1ம் தேதி மாலை முதலே திரளான பக்தர்கள் திருப்பதிக்கு குவிய தொடங்கினர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை முதல் எவ்வித தரிசன டிக்கெட்டுகள் இல்லாவிட்டாலும் பக்தர்கள் நேரடியாக திருமலைக்கு சென்று, தர்ம தரிசன வரிசையில் சென்று ஏழுமலையானை தரிசித்து வருகின்றனர்.

இவ்வாறு தரிசிக்க செல்லும் பக்தர்களுக்கு வரிசையில் உணவு, குடிநீர், சிறுவர்களுக்கு பால் என திருப்பதி தேவஸ்தானம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. மேலும் 24 மணி நேரமும் அன்னபிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது. தினமும் சுமார் 8 லட்சம் லட்டு பிரசாதங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி செய்தியாளர்களிடம் கூறுகையில், “திருமலைக்கு வரும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தால் பிரசி சத்திரத்தில் அவர்கள் காத்திருக்கலாம். கூட்டம் குறைந்ததும் தரிசனத்திற்கு செல்லும் நேரத்தை அங்கு வந்து தேவஸ்தான அதிகாரிகள் அறிவிப்பார்கள்'' என்றார்.



# தென்காசி மாவட்டம் புளியங்குடியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம்

புளியங்குடி,ஜன. 4-

புளியங்குடியில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை சங்கரன் கோவில் போக்குவரத்து ஆய்வாளர் ராஜன் பங்கேற்று துவக்கி வைத்தார்.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் சாலை பாதுகாப்பு மாதமாக நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது . இதில் சாலை பாதுகாப்பு, போக்குவரத்து விதி முறைகள், பாதுகாப்பான பயணம் , உட்பட பல்வேறு வீதி முறைகளை பற்றி அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. புளியங்குடியில் நடைபெற்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தை சங்கரன் கோவில் போக்குவரத்து ஆய்வாளர் ராஜன் துவக்கி வைத்தார். தொடர்ந்து பேருந்து நிலையத்தில் உள்ள பயணிகள் கார் மற்றும் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு போக்குவரத்து பற்றிய விதிமுறைகளை துண்டு பிரசுரம் மூலமாக வழங்கினார். நிகழ்ச்சியில் புளியங்குடி சார்பு ஆய்வாளர் திலீபன் குமார், ராஜா டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் குருநாதன், சுதன் டிரைவிங் ஸ்கூல் கணேசன்,பல்வேறு போக்குவரத்து பயிற்சி பள்ளி ஊழியர்கள். சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப் சார்பில் வருவாய்த்துறையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்




திண்டுக்கல், ஜன.4-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப் சார்பில், பத்திரிகையாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்காமல், பத்திரிக்கை செய்தியாளர்களை வஞ்சிக்கும் வருவாய் துறையை கண்டித்து, ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப் தலைவர் இளங்கோவன் தலைமையில், தாராபுரம் ரோடு ரவுண்டானாவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒட்டன்சத்திரம் பகுதியில் வசிக்கும் நலிவடைந்த பத்திரிக்கையாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கக்கோரி மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர்,உங்களுடன் ஸ்டாலின் முகாம் உள்ளிட்ட பல்வேறு காலகட்டங்களில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கக்கோரி மனு அளித்தும், இதுவரையில் பத்திரிக்கையாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படவில்லை.

தமிழ்நாடு முதலமைச்சர் 2021சட்டமன்றத் தேர்தலில் ஆட்சிப் பொறுப்பேற்று அரியணையில் அமர்ந்து, பத்திரிக்கையாளர்களின் சேவையை போற்றும் விதமாக முன்களபணியாளர்கள் என்று முதல் கையெழுத்திட்டு பத்திரிகையாளர்களை கௌரவித்தார்.

ஒரு பத்திரிக்கையாளர் முதலமைச்சராக ஆட்சி செய்யும் ஆட்சியில் நலிவடைந்த பத்திரிகையாளர்களின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது மிகவும் மன வலியை ஏற்படுத்துகிறது. ஆகையால் முதலமைச்சர் வருகையொட்டி இலவச வீட்டுமனை பட்டா தமிழ்நாடு முதலமைச்சர் கைகளால் வாங்க வழிவகை செய்து தருமாறு, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியரிடம் கோரிக்கை வைத்தோம். வருவாய்த்துறை அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பத்திரிகையாளர்கள் கொடுத்த மனுக்கள் மீதான நடவடிக்கை மேற்கொள்ளாததால், பத்திரிகையாளரின் வாழ்வாதாரத்தின் நிலையையும், வலிகளையும் வெளிப்படுத்தும் விதமாக கண்டன கோஷங்களுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப்பின் துணைத் தலைவர் உதயன்,செயலாளர் செல்வராஜ், பொருளாளர் ஆறுமுகம், கோபால்,பவுன், சதீஷ்குமார், மணிகண்டன், விஜய்கார்த்திக், முத்துசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர் மேலும் பத்திரிக்கையாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வழங்கிய ஒட்டன்சத்திரம் காவல் துறையினருக்கு நன்றி தெரிவித்தனர்.





# தென்காசி மாவட்டம் கள்ளம் புலி பொய்கை கிராமத்தில் வெள்ளப்பெருக்கு

தென்காசி, ஜன.4-

தென்காசி மாவட்டம் பொய்கைமேடு கிராமத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு, அருள்மிகு அய்யனார் கருப்பண்ண சுவாமி கோவிலை சுற்றி வெள்ளத்தால் குளம் நிரம்பியது. இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு விவசாயம் செழிப்புடன் விளங்கும் என்று விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி மற்றும் பல வருடங்களுக்குப் பிறகு ஏற்பட்ட நீர் வரத்தை பார்த்ததும் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

மேலும்.பொய்கைமேடு கிராமத்தில்உள்ளஅரசு ஆரம்பசுகாதார நிலையத்தின் வளாகத்தைச்சுற்றி வெள்ளத்தால்நீர் சூழ்ந்தது.

# நெல்லை மாவட்ட உவரி காவல் நிலைய வாகனம் விபத்து

நெல்லை, ஜன.4-

நெல்லை மாவட்டம் வள்ளியூர் உட்கோட்டம் உவரி காவல் நிலையத்திற்கு உட்பட்ட வாகனத்தில் சனிக்கிழமை பரேடுக்கு சென்ற காவலர் வாகனம் மீது டெம்போ மோதி விபத்துக்குள்ளானது. வாகனத்தில் பயணித்த ஆய்வாளர் உட்பட ஐந்து காவலர்களுக்கு காயம், ஒரு காவலருக்கு தலையில் பலத்த காயம் என்றும் தகவல். வாகனத்தில் பயணித்த அனைத்துகாவலர்களும் தற்போதுஆசாரிபள்ளம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பாலமேடு மற்றும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெறவுள்ளதை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தொடர்புடைய அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# ஜல்லிக்கட்டு காளையை களம் காண வழி அனுப்பிய அண்ணாமலை!

சென்னை, ஜன.4-

நடப்பாண்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி இன்று தொடங்கிய நிலையில், தான் வளர்க்கும் ஜல்லிக்கட்டு காளையை போட்டிகளில் பங்கேற்பதற்காக, தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை வழி அனுப்பி வைத்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், தச்சங்குறிச்சியில் இன்று (டிசம்பர் 3 ஆம் தேதி) 2026ம் ஆண்டிற்கான தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி கோலாகலமாக தொடங்கியது. தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான இந்த போட்டியில் 900 காளைகளும், 300 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர். ஜல்லிக்கட்டு போட்டியைக் காண பொதுமக்கள் பலரும் கூடினர்.

இந்நிலையில் இன்று தான் வளர்க்கும் ஜல்லிக்கட்டு காளையை போட்டிக்கு அண்ணாமலை வழி அனுப்பி வைத்தார். அவர் தனது காளைகளின் படத்தை சமூக வலைதளத்தில் பகிர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

சீசன் வந்தவுடன், இரண்டு மாத பயணத்தை எனது ஜல்லிக்கட்டு காளை தொடங்கியது. தமிழகம் முழுவதும் பல்வேறு ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்கிறது. அன்புக்குரிய காளையை பெருமிதமும், லேசான சோகமும் நிறைந்த இதயங்களுடன் அனுப்பி வைத்தேன். புகழ்பெற்ற காளையின் வருகைக்காக ஆவலுடன் காத்திருப்போம். இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.






# திருப்பூர் தெற்கு மாவட்டம் பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்

திருப்பூர், ஜன.4-

திருப்பூர் தெற்கு மாவட்டம் சார்பாக பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினரும், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே. ஈஸ்வர சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாக முகவர்கள் மாவட்ட அவைத் தலைவர் ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் முபாரக் அலி, தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர் கள், கிளைக் கழக செயலாளர் கள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டம் பாலப்பம்பட்டி விக்னேஷ் மஹாலில் நடைபெற்றது.



■ நாகர்கோவில் வழியாக தாம்பரம் சென்ற அந்தியோதயா ரெயில் மீது ஆரல்வாய்மொழி அருகே மர்மநபர்கள் கல் வீசியதில், ஜன்னல் கண்ணாடி உடைந்து கல்குளம் பகுதியைச் சேர்ந்த ரீனா அன்னமேரி தலை முகத்தில் காயம். ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து கல் வீசியவர்களை தேடி வருகின்றனர்.

# மீண்டும் கில், ஸ்ரேயாஸ் ஐயர்... நியூசி.,தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு

மும்பை, ஜன.4-

நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சுப்மன் கில் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

2026ம் ஆண்டில் இந்திய அணி தனது சொந்த மண்ணில் முதல் ஒருநாள் கிரிக்கெட் தொடரை நியூசிலாந்துக்கு எதிராக விளையாட இருக்கிறது. ஏற்கனவே, டி20 உலகக்கோப்பை மற்றும் நியூசிலாந்து டி20 தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில், நியூசிலாந்து ஒருநாள் தொடரில் விளையாடும் இந்திய வீரர்களின் பட்டியலை பிசிசிஐ வெளியிட்டுள்ளது.

அதன்படி, டி20 தொடரில் இடம்பிடிக்காத கில், மீண்டும் ஒருநாள் அணிக்கு கேப்டனாக திரும்பியுள்ளார். அதேபோல, விக்கெட் கீப்பர் பண்ட் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜும் அணியில் இடம்பிடித்துள்ளனர். காயத்தால் பாதிக்கப்பட்டிருந்த ஸ்ரேயாஸ் ஐயர் மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

உள்ளூர் போட்டிகளில் அசத்திய ருதுராஜ் கெயிக்வாட், சர்பிராஷ் கான் மற்றும் தேவ்தத் படிக்கல் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. 2026 டி20 உலகக்கோப்பையை கருத்தில் கொண்டும், 10 ஓவர்கள் வீசக்கூடிய உடல் தகுதியில்லாததாலும், ஹார்திக் பாண்டியா ஒருநாள் தொடருக்கான அணியில் சேர்க்கப்படவில்லை.

# சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோவிலில் திருவாதிரை தேரோட்டம்

சங்கரன்கோவில்.ஜன 04-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கரநாராயண சாமி கோவிலில், திருவாதிரை திருவிழா கடந்த டிசம்பர் 25 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவில், சுவாமி, அம்பாள் பல்வேறு வாகனங்களில் காலை மாலை இருவேளைகளிலும் வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான தேரோட்டம் நேற்று காலை நடைபெற்றது. இதனை முன்னிட்டு சுவாமி அம்பாள் தேரில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெற்றது.



அதனை தொடர்ந்து கோவில் முன்பு தொடங்கிய தேர் முக்கிய வீதி வழியாக மீண்டும் கோவில் முன்பு நிறைவடைந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். சிகர நிகழ்ச்சியான திருவாதிரை திருவிழா பத்தாம் திருநாளான சனிக்கிழமை நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் மண்டகப்படிதாரர்கள் செய்தனர்.

# ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப் சார்பில் வருவாய்த்துறையை கண்டித்து பத்திரிகையாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கக்கோரி கண்டன ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், ஜன.4-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப் சார்பில், பத்திரிகையாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்காமல், பத்திரிக்கை செய்தியாளர்களை வஞ்சிக்கும் வருவாய் துறையை கண்டித்து, ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப் தலைவர் இளங்கோவன் தலைமையில், தாராபுரம் ரோடு ரவுண்டானாவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒட்டன்சத்திரம் பகுதியில் வசிக்கும் நலிவடைந்த பத்திரிக்கையாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கக்கோரி மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர்,உங்களுடன் ஸ்டாலின் முகாம் உள்ளிட்ட பல்வேறு காலகட்டங்களில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கக்கோரி மனு அளித்தும், இதுவரையில் பத்திரிக்கையாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படவில்லை.

தமிழ்நாடு முதலமைச்சர் 2021சட்டமன்றத் தேர்தலில் ஆட்சிப் பொறுப்பேற்று அரியணையில் அமர்ந்து, பத்திரிக்கையாளர்களின் சேவையை போற்றும் விதமாக முன்களபணியாளர்கள் என்று முதல் கையெழுத்திட்டு பத்திரிகையாளர்களை கௌரவித்தார்.

ஒரு பத்திரிக்கையாளர் முதலமைச்சராக ஆட்சி செய்யும் ஆட்சியில் நலிவடைந்த பத்திரிகையாளர்களின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது மிகவும் மன வலியை ஏற்படுத்துகிறது. ஆகையால் முதலமைச்சர் வருகையொட்டி இலவச வீட்டுமனை பட்டா தமிழ்நாடு முதலமைச்சர் கைகளால் வாங்க வழிவகை செய்து தருமாறு, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியரிடம் கோரிக்கை வைத்தோம். வருவாய்த்துறை அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பத்திரிகையாளர்கள் கொடுத்த மனுக்கள் மீதான நடவடிக்கை மேற்கொள்ளாததால், பத்திரிகையாளரின் வாழ்வாதாரத்தின் நிலையையும், வலிகளையும் வெளிப்படுத்தும் விதமாக கண்டன கோஷங்களுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஒட்டன்சத்திரம் மீடியா மற்றும் பிரஸ் கிளப்பின் துணைத் தலைவர் உதயன்,செயலாளர் செல்வராஜ், பொருளாளர் ஆறுமுகம், கோபால்,பவுன், சதீஷ்குமார், மணிகண்டன், விஜய்கார்த்திக், முத்துசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர் மேலும் பத்திரிக்கையாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வழங்கிய ஒட்டன்சத்திரம் காவல் துறையினருக்கு நன்றி தெரிவித்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000